# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (16.09.2015 முதல் 20.09.2015)

***அறிக்கை எண் 72/2015*** ***தேதி: 15.09.2015***

### மாநிலத்தின் கடந்த வார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 31°செ முதல் 40°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 21°செ முதல் 29°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 18°செ முதல் 24°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசான மழை காணப்பட்டது.

### எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (16.09.2015 முதல் 20.09.2015)

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-82 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 55-70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 20 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 16.09.15 | 0 | 33 | 23 | 5 | 70 | 55 | 20 | தென்மேற்கு |
| 17.09.15 | 0 | 33 | 23 | 5 | 71 | 56 | 20 | தென்மேற்கு |
| 18.09.15 | 0 | 33 | 23 | 5 | 72 | 75 | 20 | தென்மேற்கு |
| 19.09.15 | 0 | 33 | 23 | 5 | 74 | 58 | 20 | தென்மேற்கு |
| 20.09.15 | 0 | 32 | 23 | 6 | 82 | 70 | 20 | தென்மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் 5 நாட்களுக்கு வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். செப்டம்பர் 20 – 26ம் தேதிகளில் மானாவாரி விதைப்பிற்கு நிலங்களை தயார் செய்யவும்.
- ✓ தற்போது நிலவும் வானிலையை கருத்தில் கொண்டு மஞ்சள் பயிர் அழுகாமல் இருக்க வடிகால் வசதி செய்யவும்.
- ✓ தற்போது நிலவும் வானிலையை கருத்தில் கொண்டு சம்பா நெல் விதைப்பினை தொடரலாம்.
- ✓ காற்றின் வேகம் மணிக்கு 20 கிலோ மீட்டரை விட அதிகமாக இருப்பதால் கரும்பு மற்றும் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ திருப்பூர் மாவட்டத்தில் மழை எதிர்பார்க்கப்படாததால் பயிர்களுக்கு நீர் பாசனம் செய்யவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ வரும் 5 நாட்களுக்கு வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். தற்போது நிலவும் வானிலையை கருத்தில் கொண்டு செப்டம்பர் 20 – 26ம் தேதிகளில் மானாவாரி விதைப்பிற்கு நிலங்களை தயார் செய்யவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**